# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## அசல் வழக்கு எண். 126/2019

| | |
|---|---|
| பெயர் : திரு. முருகன் | கிராமம் : |
| த/பெ. : திரு. வீரப்பகவுண்டர் | தாலூக்கா: |
| வயது : | தொழில் : |

Deposition of **PW- 2** solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 16th day of October, 2024.

**முதல்விசாரணை**:-

முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன்.

**குறுக்குவிசாரணை**:- (13ம் பிரதிவாதி தரப்பில்)

வாதிக்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆமாம். வாதி பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். யார் யார் மீது வழக்கு போட்டுள்ளார் என்றால் ஆனைகவுண்டர், சேப்பெருமாள், வெள்ளையம்மாள் ஆகியோர்மீது வழக்கு போட்டுள்ளார். 2010ம் வருடம் வாதியின் சகோதரர்கள் சொத்துக்களை பாகம் செய்துகொண்டார்கள் என்றால் சரியல்ல. 13ம் பிரதிவாதியை எனக்கு தெரியும். தாவா சொத்தில் 25 சென்ட் விலைக்கு வாங்கி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். வாதி 13ம் பிரதிவாதி வாங்கிய சொத்தை விற்றுவிட்டு மற்ற சொத்துக்களில் பாகம் கேட்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

அழகம்மாள் 7ம் பிரதிவாதி பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும், வாதி சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.